2015 ஆகஸ்ட் 26]

144—

கால்நடை மருந்தகக் கட்டடம்

***52482—திருமதி செல்வி ராமஜெயம்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி ஊராட்சி ஒன்றியம், மேல்வளையமாதேவி ஊராட்சியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் புவனகிரி தொகுதி, புவனகிரி ஊராட்சி ஒன்றியம், மேல்வளையமாதேவி ஊராட்சியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடங்கள் கட்ட வேண்டும் என கேள்வி எழுப்பியுள்ளார்கள். இந்தக் கேள்வி வருவதற்கு முன்பே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையினைப் பெற்று அந்த ஊராட்சியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்கு 25 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, புதிய கட்டடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்றும், விரைவில் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறக்கப்படவுள்ளது என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம் அவர்கள்.

முற்பகல் 10-55

திருமதி செல்வி ராமஜெயம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அலைமகள், கலைமகள், மலைமகள் மூவரும் ஒருங்கிணைந்த தமிழகத்தின் தலைமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா மகப்பேறு சஞ்சீவி திட்டத்தில் தாயும், சேயும் சிரஞ்சீவியாக வாழ வழி வகுத்த எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கும் சாதனை, எதிலும் சாதனைகளைப் படைத்த எங்கள் கருணையின் வடிவமே! மனித சக்தி கடந்த மகாசக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) மலை குலைந்தாலும் நிலை குலையாது மீண்டும் மண்ணாள வந்த

எங்கள் மங்கையர்க்கரசியான மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

புவனகிரி தொகுதி, புவனகிரி ஊராட்சி ஒன்றியம், மேல்வளையமாதேவி ஊராட்சியில் உள்ள கால்நடை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தர கோரிக்கை வைக்கும் முன்பே புதிய கட்டடம் கட்டித் தந்ததற்கும், புவனகிரி ஊராட்சி ஒன்றியம், அகர ஆலம்பாடி ஊராட்சியில் புதிய கால்நடை கிளை மருந்தகம் அமைத்துக் கொடுத்ததற்கும் மனித குலத்திற்கு மட்டுமல்லாமல் கால்நடைகளுக்கும் காவல் தெய்வமாக விளங்கி வரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றிகளைக் காணிக்கையாக்கி, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என்னுடைய நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், புவனகிரி தொகுதி, கம்மாபுரம் ஊராட்சி ஒன்றியம், சேப்ளாநத்தம் பகுதியில் கால்நடைகளை அதிகம் வளர்த்து வருகின்ற காரணத்தினால், சேப்ளாநத்தம் ஊராட்சியில் கால்நடை கிளை மருந்தகம் அமைத்துத் தரவும், அகர ஆலம்பாடி கால்நடை கிளை மருந்தகத்திற்குப் புதிய கட்டடம் கட்டித் தரவும் மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசும் முன்வருவார்களா எனத் தங்கள்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டிருக்கின்ற அந்தக் கிராமத்திலே ஒரு கால்நடை கிளை நிலையம் அமைக்கக் கேட்டிருக்கிறார்கள். 2015-2016 ஆம் ஆண்டிலே புதியதாக கிளை நிலையங்கள் அமைக்கப்படுகின்ற ஆணையினை மாண்புமிகு அம்மா அவர்களிடம் பெற்று, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்தக் கிராமத்திற்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, புதிய கட்டடம் கட்ட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். அதற்கும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையினைப் பெற்று, நிதியுதவி கிடைக்கும்போது அந்தக் கிராமத்திற்கும் முன்னுரிமை அளிக்கப்படும் என்பதைத்

2015 ஆகஸ்ட் 26]

தங்கள்வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 145, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

145—

மாணவியர் விடுதி

***27707—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர்: *மாசியிலே அவதரித்த மாசிலா தாயே, மகத்திலே தோன்றிய மாதரசியே அம்மா, தங்களின் பொற்பாதங்களை வணங்கி, வினாவிற்கு விடை அளிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் சட்டமன்றத் தொகுதி, பர்கூர் மலைப் பகுதியில் பழங்குடியின மக்களே பெரும்பான்மையாக உள்ளனர். இப்பகுதியில் ஆதி திராவிட மக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவானதாகவே உள்ளது. பர்கூர் மலைப் பகுதியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் பழங்குடியினருக்காக இயங்கும் 9 அரசு உண்டி உறைவிடப் பள்ளிகளில் 20 சதவிகித இடங்கள் ஆதி திராவிட மாணாக்கர்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்தும், அப்பள்ளிகளில் ஆதி திராவிட மாணாக்கர்களின் சேர்க்கை மிகவும் குறைவானதாகவே உள்ளது. எனவே, பர்கூர் மலைப் பகுதியில் ஆதி திராவிடர் நல மாணவியர் விடுதி தொடங்கிட தற்போது தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.